**கொழும்பு பல்கலைக்கழகம் - 2010**

---

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் கொழும்பு பல்கலைக்கழகம் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் வரைவு நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது புலனாகிய ரூபா 35,865,369 க்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அக் கணக்கீட்டுக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு திருத்தஞ் செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 12 ஆந் திகதியன்று மீண்டும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் 61 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2011 மே 2 ஆந் திகதியன்றே வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் வெளிவாரிக் கற்கை நெறியினது ஒட்டுமொத்த மிகையாகிய ரூபா 366,023,680 ஒதுக்கத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் 19 ஆம் பிரிவுக்கு ஏற்ப அந்த ஒட்டு மொத்த மிகையில் முடிவுற்ற கற்கை நெறிகளுக்குரிய மிகையை வருமான, செலவின கணக்கிற்கு மாற்றஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் 33 ஆம் பிரிவுக்கு ஏற்ப வெளிவாரிக் கற்கை நெறிகளுக்குரிய மொத்த வருமானம் வருமான செலவினக் கணக்கில் காட்டப்படாது வெளிவாரிக் கற்கை நெறியின் வருவாய்ச் செலவினத்திற்குச் சமமான ரூபா 255,065,984 வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 க்கு ஏற்ப 2009 ஜுலை 22 ஆந் திகதியன்று நிர்மாண வேலை முடிவடைந்து ஒப்படைக்கப்பட்ட சேரம் மகளிர் விடுதியினது நிர்மாண வேலைக்கு ஏற்பட்ட ரூபா 133,418,588 ஆன கிரயம் மூலதனமாக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின்போது மேற்படி கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும் தேய்மானத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

**1.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

**(அ) உடன்படிக்கை மீறலுக்காகப் பெற வேண்டிய தொகை**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 10 ஆம் அத்தியாயத்தினது 33 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கைகளை மீறிய 43 பேராசிரியர்களிடமிருந்து ரூபா 46,242,958 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 அன்றும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) நான்கு விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,382,276 அறவிடப்படுவதற்காக அவர்களுக்கு எதிரான வழக்குத் தொடர்வதற்குரிய ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. 7 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,892,023 தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்பட்டிருந்தன.

(iii) இருபத்து நான்கு பேராசிரியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,817,611 அவர்களது சேமலாப மற்றும் பணிக்கொடை நிதியங்களிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம் மீதியில் 15 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,567,605 மீதியை அறவிடுவதற்கு முடிவு செய்து 8 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் போதியளவு தொகை இதுவரை அறவிடப்படாதிருந்தது.

(iv) உடன்படிக்கை மீறலுக்காக ஒரு விரிவுரையாளரிடமிருந்து ரூபா 1,218,641 அறவிடப்படவேண்டியிருந்தது. அதில் ரூபா 1,101,730 மீளாய்வாண்டிற்கு முன்னர் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது எதுவுமே அறவிடப்படவில்லை.

(ஆ) ஆண்டு முடிவில் உள்ள ரூபா 937,347 பெறுமதியான காலங் கடந்த கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான சுழற்சி நடைமுறை எதுவும் இருக்கவில்லை.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 2003 ஜுலை 18 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தால் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் | கல்விசார் பதவியணியினரது பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடைக் கொடுப்பனவு ஆகியவற்றைக் கணிப்பிடுகையில் கல்விசார் படி கருத்திற்கொள்ளப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் 2005 ஜுலை 1 க்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட கல்விசார் பதவியணியினருக்கு அந்தப் படியும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99(1) ஆம் பிரிவு | உருவாகும் சகல வருமானம், நன்கொடை உள்ளிட்ட சகல நிதியமும் பல்கலைக்கழகங்கள் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், பல்கழைக்கழகமானது 156 பல்வேறு நிதியங்களைப் பேணிவந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்நிதியத்தில் ரூபா 458,065,642 மீதியுமிருந்தது. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/ 2 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனிகளது துணைப்பாகங்கள் மென்அணி என்பவற்றிக்கென விசேட நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் V ஆம் | பேராசிரியர் பதவி அல்லாத பதவிகள் வகிப்போர் 60 வயதின் பின்னர் சேவையில் அமர்த்தப்படலாகாது. எனினும், அவ்வாறான 3 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த |

| | | |
|---|---|---|
| | அத்தியாயத்தினது 5.2 ஆம் பந்தி -- - 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 9/2007 (i) ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கை | அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டு அவ்வுத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டு முடிவுவரை ரூபா 2,848,224 ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் இலக்கம் 29/98, 29/98 (i), 07/2007, 07/2007 (i), 02/2009 என்பனவும் 1994 ஜூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அப்பால் 2003 ஜனவரி 1 க்கு முன்னர் பல்கலைக்கழகம் ஆட்சேர்த்த ஊழியர்களுக்கு மொழித் தேர்ச்சிக்கான படி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | நி.பி 371 மற்றும் உப வேந்தரின் பீ/ஏசீ/பீகே/ஏ இலக்கமுடைய 2010 நவம்பர் 12 ஆந் திகதிய கடிதம் என்பன | பல்கலைக்கழகத்தின் சகல சில்லறைக்காசு முற்பணமும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின்போது ரூபா 46,952 மீதி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. |
| (எ) | நி.பி 371(2) | பல்கலைக்கழக கட்டிடம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் கூறு, ஸ்ரீபாலி மண்டபம் என்பவற்றிக்கு வழங்கப்பட்ட ரூபா 939,626 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதில் 1 முதல் 20 ஆண்டு காலம் வரையிலான தாமதம் நிலவியது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மிளாய்வு

---------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

---------------------------

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளால் அரசாங்க உதவு தொகையைக் கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ஏற்பட்ட பெறுபேறுகள் ரூபா 1,021,132,199 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 920,323,868 ஆகும். இதற்கமைய மீளாய்வாண்டினது

பற்றாக்குறை ரூபா 100,808,331 அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்கான அரசாங்க மானிய பங்களிப்பு ரூபா 1,078,295,988 காரணமாக ஆண்டின் மிகை ரூபா 57,163,789 ஆகியது. முன்னைய ஆண்டின் அரசாங்க மானிய பங்களிப்பு ரூபா 1,044,350,808 காரணமாக அவ்வாண்டின் மிகை ரூபா 124,026,940 ஆகியது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 செயற்திறன்

--------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரி விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 2,289 ஆகும். 2009 ஆம் ஆண்டில் இது 2,433 ஆகும். ஒவ்வொரு பீடமும் ஆட்சேர்த்த பட்டப்படிப்பு பாடநெறிக்கான விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை கீழே காணப்படுகின்றது.

| **பீடம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| கலை | 665 | 661 |
| சட்டம் | 251 | 250 |
| கல்வி | 104 | 244 |
| முகாமைத்துவமும் நிதியும் | 434 | 416 |
| விஞ்ஞானம் | 455 | 534 |
| மருத்துவம் | 230 | 233 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 150 | 95 |
| | 2,289 | 2,433 |

மேற்படி தகவல்களைப் பகுப்பாய்வு செய்கையில் ‘‘கல்விப் பீடத்தின்’’ ஆட்சேர்ப்பு ஏறக்குறைய 57% பின்னடைவுக்குள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது 2,153 பேர் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றுச் சென்றிருந்தனர். 2009 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை 1,838 ஆகும். ஒவ்வொரு பீடத்திலும் பட்டம் பெற்றோரது எண்ணிக்கை கீழே காணப்படுகின்றது.

| பீடம் | ஆண்டு | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| கலை | 795 | 577 |
| சட்டம் | 212 | 196 |
| கல்வி | 112 | 143 |
| முகாமைத்துவமும் நிதியும் | 348 | 348 |
| விஞ்ஞானம் | 394 | 332 |
| மருத்துவம் | 179 | 193 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 113 | 49 |
| மொத்தம் | 2,153 | 1,838 |

(ஆ) 2010 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,359 ஆகும். முன்னைய ஆண்டில் அவ்வெண்ணிக்கை 8,800 ஆகும். இதனுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த எண்ணிக்கை 441 ஆகும். இம்மாணாக்கரது எண்ணிக்கை பீடங்களுக்கிடையே பகிர்வுக்குள்ளான விதம் கீழே காணப்படுகின்றது.

| பீடம் | ஆண்டு | |
|---|---|---|
| | 2010 | 2009 |
| கலை | 2,249 | 2,785 |
| சட்டம் | 897 | 872 |
| கல்வி | 283 | 296 |
| முகாமைத்துவமும் நிதியும் | 1,650 | 1,621 |
| விஞ்ஞானம் | 1,721 | 1,674 |
| மருத்துவம் | 1,151 | 1,234 |
| ஸ்ரீபாலி மண்டபம் | 408 | 318 |
| மொத்தம் | 8,359 | 8,800 |

(ஈ) **விரிவுரை மணித்தியாலயம்**

---------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆரம்ப பட்டதாரிகளுக்கு 2009/2010 ஆம் ஆண்டில் 43,327 மணித்தியாலங்களுக்கு உள்ளக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் விரிவுரை மணித்தியாலங்ள் 35,880 ஆகும். ஆரம்ப பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின்படிப்பு என்பவற்றிற்கான வெளிவாரி விரிவுரை மணித்தியாலயங்கள் 11,418 ஆகும். முன்னைய ஆண்டில் இவ்விரிவுரை மணித்தியால எண்ணிக்கை 15,888 ஆகும்.

(உ) **பரீட்சைகளை நடாத்துதல்**

-----------------------------------------------

மீளாய்வாண்டின்போது ஆரம்ப பட்டதாரிப் பரீட்சைகள் 159, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பரீட்சைகள் 25 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் 38 பிற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகள் 10 என நடாத்தப்பட்டிருந்தன. இதற்கொப்பாக முன்னைய ஆண்டில் 143 ஆரம்ப பட்டதாரிப் பரீட்சைகளும் 11 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களும், 19 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகளும் 6 பிற டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கமைய, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் பட்டப்பின் படிப்பு என்பன முறையே 127%, 100% என அதிகரித்திருந்தன. இவற்றைவிட, பட்டக்கல்விப் பீடத்தில் மீளாய்வாண்டில் 2 நிறைவேற்றுதர டிப்ளோமாக்களும் 11 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களும் 12 பட்டப்பின்படிப்பு பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் அப்பீடம் 16 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள், 7 பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் என்பவற்றை நடாத்தியிருந்தன. இதற்கமைய, பட்டப்பின்படிப்பு டிப்ளோமாப் பரீட்சைகள் 31% குறைந்தும் பட்டப்பின்படிப்புப் பரீட்சைகள் 71% அதிகரித்தும் இருந்தன.

### 2.2.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகளைச் சக்திமிக்கதாக்க மீளாய்வாண்டில் பல்கைலக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் கூறு பெற்ற

தொகை ரூபா 361,454,159 ஆகும். ஆண்டின் செலவினம் ரூபா 327,858,544 ஆகும். இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் பல்கலைக்கழக செயல்திட்டத்தின் 2.6.4 ஆம் பந்தியின் பிரகாரம், ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ கூறில் முன்னுரிமை ஆராய்ச்சித் துறைகளை இனங்கண்டு கொள்வதற்கும் அம் முன்னுரிமைத் துறைகளுக்கு நிதியைப் பெறுவதற்குமான திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ii) செயல் திட்டத்தின் 2.6.4 க்கமைய 2009-2013 க்கென ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தைப் பல்கலைக்கழகம் தயாரிக்கவில்லை.

(iii) செயல் திட்டத்தின் 2.6.3.1 க்கமைய ஆராய்ச்சிப் பணிகளைச் சக்திமிக்கதாக்க நிர்வாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கு பதவியணி அபிவிருத்திக் கூறினால் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) தனியார் நிறுவனத்திடமிருந்து பாதுகாப்புச் சேவைகளைப் பெறுதல்**

-----------------------------------------------------------------------------------------------------------

பல்கலைக்கழக பாதுகாப்பு நடவடிக்கைகள் 3 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களால் குறித்த சேவைகள் பெறப்படுவதுடன் அச்சேவைகளது பெறுமதி ரூபா 18,421,185 ஆகவும் இருந்தது. 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய சேவை ஒப்படைப்புக் கடிதம் மற்றும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஒக்டோபர் 01 ஆந் திகதி குறித்த பாதுகாப்புச் சேவை ஒப்பந்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருசார்பினரும் முறையான சேவை உடன்படிக்கையில் ஈடுபடவில்லை.

(இ) இரசாயன உயிர்வாயு மற்றும் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனம் இயங்கியவாறிருக்கும் பல்கலைக்கழகத்திற்குரிய காணி மற்றும் ரூபா 116,864,648 க்கான கட்டிடம் என்பவற்றை அந் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்துதல்

---

பல்கலைக்கழகத்தில் உள்ள 47 நிதியங்களும் மீளாய்வாண்டில் செயற்படாதிருந்தன. அந்நிதியங்களின் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 61,367,495 ஆகும். இந்நிதியங்கள் 1 முதல் 5 ஆண்டுகளாகச் செயற்படாதிருந்தன. மீதிகளிலும் கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டதால் ஒரு நிதியத்தில் ரூபா 48,146 வரவு மீதியும் இருந்தது.

### 2.2.4 நோக்கங்களுக்கு எதிரான கொடுப்பனவுகள்

---

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99(1) பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்ட ஏற்பாடுகளுக்குப் புறம்பாகத் தாபிக்கப்பட்ட உபவேந்தர் நிதியம் - 1 க்கு ரூபா 700,000 மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றினது குறைபாடுகள் அவ்வப்போது உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) முற்பணத்தைத் தீர்த்துவைத்தல்